# பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව

இலங்கை மத்திய வங்கி

CENTRAL BANK OF SRI LANKA

## 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துதல் அல்லது வைப்புக்களை ஏற்றல்

**அத்தபத்து முதியன்செலாகே தம்மிக்க குமார அத்தபத்து**

**(தே அ அ இல.693041988V)**

**மற்றும்**

**இயோன் லங்கா இன்வெஸ்ட்மென்ட் என்ட் பில்ம் புரடெக்ஷன் இன்டர்நெஷனல் கம்பனி (பிறைவட்) லிமிடெட் (PV 125740)**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவின் கீழ் கொண்டுநடாத்தப்பட்ட விசாரணையொன்றினைத் தொடர்ந்து, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2020.09.15ஆம் திகதியன்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில், 'சமன் கெகுலா' அம்பலாவ, தெமடலுவ, குருநாகல் என்ற முகவரியில் அமைந்துள்ள அத்தபத்து முதியன்செலாகே தம்மிக்க குமார அத்தபத்து மற்றும் இயோன் லங்கா இன்வெஸ்ட்மென்ட் என்ட் பில்ம் புரடெக்ஷன் இன்டர்நெஷனல் கம்பனி (பிறைவட்) லிமிடெட் ஆகிய இரண்டும் சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதித் தொழிலைக் கொண்டு நடாத்தியுள்ளனர் அல்லது வைப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளனர் எனத் தீர்மானித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் கோரிக்கையின் மீது கொழும்பு மேல் நீதிமன்றம், மேற்குறித்த தனிப்பட்டவரும் கம்பனியும் வைப்புக்களை அல்லது ஏதேனும் வேறு வடிவில் நிதியங்களைக் கோருதல் அல்லது திரட்டுதல், சொத்துக்களை கையுதிர்த்தல்/ பாராதீனப்படுத்தல், ஏதேனும் கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர்பில் ஏதேனும் கொடுக்கல்வாங்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றைத் தடுக்கின்ற தடைக் கட்டளைகளை 2021.07.12 ஆம் திகதி வரை நீடித்துள்ளது என பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

மேலும், சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இது தொடர்பில் குற்றவியல் நடவடிக்கைமுறைகளைத் தொடுப்பதற்கு இலங்கை மத்திய வங்கி, ஏற்கனவே சட்டமா அதிபர் திணைக்களத்தைக் கோரியுள்ளது என பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

**பணிப்பாளர்**
**வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி.**


இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01

011-2477000, 011-2440330, 011-2330220 dsnbfi@cbsl.lk www.cbsl.gov.lk